1995 நவம்பர் 7]

ஒரு நிலமை விவசாயிகளுக்கு இருந்து கொண்டிருக்கிறது. மேலும், சாதாரண விவசாயிகள் அந்தந்தத் துறைகளுக்குச் சென்று அறிவதற்குரிய வாய்ப்புகள் கிடைப்பதில்லை. எனவே, இத்தனை அமைப்புகளும் ஒரே குடையின்கீழ் வருகிறபட்சத்தில், விவசாயிகள் ஓரிடத்திலே சென்று அணுகுகிற நேரத்திலே, அத்தனைத் தேவைகளும் பூர்த்தி செய்யக்கூடிய நிலை ஏற்படும். எனவே, மீண்டும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய அரசு, பரிவுடன் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அத்தனைக் கழகங்களும் வேளாண்மைத் துறை என்ற குடையின்கீழ்தான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்தும் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையத்திலே அவை வழங்கப்படுகின்றன. புதிய தொழில்நுட்பங்களும் வழங்கப்படுகின்றன. எனவே, புதிய வாணிபக் கழகம் தோற்றுவிப்பதற்கு இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

31—

கோரந்தாங்கலில் மகளிர் பால்வள உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

***38131—*திருமதி கே. எம். கலைச்செல்வி :**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடி தொகுதி, பிரம்மபுரம் ஊராட்சி, கோரந்தாங்கல் கிராமத்தில் மகளிர் பால்வள உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்திட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டம், காட்பாடி தொகுதி, பிரம்மபுரம் ஊராட்சி, கோரந்தாங்கல் கிராமத்தில், மகளிர் பால் உற்பத்தியாளர்

கூட்டுறவுச் சங்கம், 28-12-1994 அன்று பதிவு செய்யப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் அப்போது வைத்தபோது, அங்கே அப்படிப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவில்லை. கோரிக்கை வைத்தவுடன், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு, கனிவோடு பரிசீலித்து, இப்போது அந்தக் கூட்டுறவுச் சங்கம் நல்லமுறையில் அமைக்கப்பட்டதோடு, சிறப்போடும் நடைபெற்று வருகிறது. அதற்காக, தொகுதிவாழ் மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

32—

கூட்டுறவு நூற்பாலை நூல்களின் விற்பனை

***34154*—திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள், அதன் நூல்களை பம்பாய் வணிக சந்தைக்கு அனுப்புகின்றனவா?

(ஆ) இது தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைகளை பாதித்துள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சன்னரக கோன் நூல்கள் மட்டும் நம்முடைய தமிழகத்து நெசவாளர்களின் தேவைக்குமேல் இருப்பதை மட்டுமே, ஆலைகளின் நன்மை கருதி விற்கப்படுகின்றன. இதனால் தமிழ்நாட்டு நூற்பாலைகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.